கீழ்வானத்தில் கதிரவன் உதிக்குமுன் இளஞ்சிவப்பு ஒளியினை கண்டதும், கதிரவன் இன்னும் உதிக்கவில்லையானாலும், இரவு முடிந்து மற்றொரு நாள் தொடங்கப் போகிறது என மன நிறைவடைகிறோம். இளஞ்சிவப்பு ஒளி கருஞ்சிவப்பினோடு ஒளிர்வித்து, மீட்பின் தொடக்கமென திருவருகை காலம் வாக்களிப்பதை உணர்த்துகிறது. ஆக திருப்பலிக்காக நாம் ஒன்றுகூடியிருக்கும் வேளையில் குரு இளஞ்சிவப்பு உடையுடன் வர, திருச்சபை 'இறைவனில் அகமகிழுங்கள், ஆண்டவர் அண்மையில் உள்ளார், நீங்கள் மீண்டும் அகமகிழுங்கள்' என்று பிரகடனப்படுத்துகிறது.

நமது திருவருகைக்கால தியாகங்களுக்கான காரணங்களும் நமக்கு மீண்டும் நினைபுறுத்தப்படுகின்றன. கிழக்கினில் அனுதினமும் கதிரவன் தோன்றுவது போல நமது துன்பங்கள் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்னும் வாக்குறுதியால் நாம் ஆறுதலடைகிறோம். ஆனால் ஆண்டவரிடம் நம்மை இட்டுச்செல்லும் புனித பாதையிலிருந்து நம்மை பிரிக்கும் பாவத்திற்கு மனம் வருந்த நம்மையே உள்நோக்கி, மனசாட்சியை ஆராய வேண்டும். இருந்தாலும் ஆண்டவரின் வருகையுடன் வரும் மகிழ்ச்சியின் நிறையொளி நமது நிழலினை விரட்டி, மனிதத் துன்பமெனும் இருளினை முற்றாக போக்கிவிடும் விடியலை நாம் வெளியிலும் காண வேண்டும்.

இந்த இளஞ்சிவப்பு ஒளியில் கிறிஸ்துவ மகிழ்ச்சியின் இயல்பை நாம் கவனிப்போம். நீங்கள் ஆகக்கடைசியாக, உண்மையான மகிழ்ச்சியில் இருந்தது எப்போது? அம்மகிழச்சியின் காரணம் என்ன? எவ்வளவு நேரம் அது நீடித்தது? உலகிலுள்ள அனைத்தும் மங்கி மறைந்துவிடும். இதுவே உலகின் நிலை, உலகை சார்ந்த அனைத்து மகிழச்சியும் இவ்வவாறே மங்கி மறைந்துவிடும். இது இயற்கையின் நியதி. புது காரின் வாசம் சொல்லாமல் ஒருசில மாதங்களில் மயமாகிவிடும். அந்த காரை ஓட்டும் மகிழ்ச்சியும் அன்றாட போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் வெறுப்பினால் விரைவில் ஓய்ந்துவிடும். விடுமுறையில் சென்று வந்த மகிழ்ச்சியும் அவற்றின் நினைவுகளும் தரும் தற்காலிக மகிழ்ச்சியும் வேலையின் பளு காரணமாக காணாமற்போய் விடும். . நமது இன்பமான நினைவுகளை ஞாபகப்படுத்தும் முகநூல் படங்களும் கடந்துவிடும். நமது எல்லா மகிழ்ச்சிகளும் வாக்களிக்கப்பட்ட முடிவில்லா விண்ணக பேரின்பத்தில் ஊன்றியிருந்தால்தான், கிறிஸ்து கொண்டுவரும் நம்பிக்கையில் நாம் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

அனைத்து நன்மைகளையும் நமக்களிக்கும் இறைவனுக்கு நமது மகிழ்ச்சியை அர்ப்பணமாக்குவதே, இவ்வுலகை கடந்து விண்ணகத்திற்கு அருகில் அன்றாடும் நம்மை கொண்டு செல்லும் பேரின்பத்தின் தொடக்கமாக அமையும். இதனால்தான், 'எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்' என்று புனித பவுல் கூறுகிறார். ஆம். நாம் மகிழ்வதற்கு காரணம் இல்லாவிட்டாலும், நமது விருப்பப்படி எதுவும் நடக்கவில்லை யெனினும் நாம் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். காரணம் "கிறிஸ்து இயேசுவில் நீங்க்ள மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்" புனித பவுல் வலியுறுத்துகிறார். நமது கவலைகள், துன்பங்கள் மற்றும் உலகில் உள்ள அனைத்தையும் அதனதன் இடத்தில் முறையாக வைக்கும் இயேசு கிறிஸ்துவே முடிவில்லா மகிழ்ச்சி. இவ்வுலக மகிழ்ச்சியோ கடந்து போகும். இறையரசில் இயேசு கிறிஸ்துவோடு இருப்பதே நித்திய மகிழ்ச்சி.

இன்று நமக்கு அளிக்கப்படும் இளஞ்சிவப்பு கண்ணாடி மகிழ்ச்சியின் நம்பிக்கையாகும். நாம் இவ்வுலகில் கவலையையும் மகிழ்ச்சியையும் சேர்ந்தே அனுபவிக்க வேண்டுமென்பதனை நிராகரிக்கவில்லை. மாறாக நமக்கு கிறிஸ்துவின் வருகை விடியலை வழங்குகிறது. மேலும் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு திருமுழுக்கு யோவானுடன் நாமும் சேர்ந்து, சாட்சிகளாக நிற்க செய்கிறது. ✣

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

NEWREC
எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

17 டிசம்பர் 2017
திருவருகை காலம்
3ம் ஞாயிறு



# நம்பிக்கையில் மகிழ்ச்சியாய் இருப்பது



# மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*

*கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு*

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: திருவருகைக் காலம் - மூன்றாம் ஞாயிறு : (ஆண்டு இரண்டு) சனி 16-12-2017 ஞாயிறு 24-12-2017**

எசா 61: 1-2a, 10-11 லூக்கா 1:46-48, 49-50, 53-54 1 தெச 5: 16-24 யோவான் 1: 6-8, 19-28

**என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும் (லூக்கா 1:46-50, 53-54)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. டெனிஸ்) | |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. டைட்டஸ், ஏஞ்சலா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. அலோசியஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மீண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 19 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 20 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 21 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 22 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 6.00 திருப்புகழ் மாலை தொடர்ந்து திருப்பலி. ஒப்புரவு அருளடையாளம்*** |

**திருவருகைக் காலம் - மூன்றாம் ஞாயிறு : ( ஆண்டு இரண்டு)**

2 சாமு 7: 1-5, 8b-12, 14a, 16 தி.பா 88: 2-3, 4-5, 27-29 உரோ 16: 25-27 லூக்கா 1: 26-38

**ஆண்டவருடைய பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன். (தி.பா 88)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. டெனிஸ்) | |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. டைட்டஸ், ஏஞ்சலா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. அலோசியஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மீண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

ஞாயிறு 24 : மாலை **5.00** மணி (ஆங்கிலம்) இரவு **7.00** (தமிழ்) இரவு **9.00** (சீனம்) இரவு **11.00** (ஆங்கிலம்) மாலை **4.30** (தித்தி)

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

*அதிச வுக்கு நன்றி கூறுவோம் :*
*புனித டைட்டஸ் (தாமான் டுசுன் நியோர்), புனித ஏஞ்செலா (தாமான் பிடாரா)*

**2017 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**1. ஆலய காணிக்கை**

9/10 நவம்பர் ரிம: 9, 326.25 தித்தி ரி.ம: 107.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2. திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**

I. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
II. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (த) : ரி.ம 5.00
III. அன்றாட சிந்தனை 2018 (ஆங்கிலம் தமிழ் : ரி.ம 20.00
IV. **மறைந்த முதன்மைக்குரு (மோன்சின்யூர்) அந்தோணி தோமஸ்** அவர்களுடைய நினைவுப் புத்தகம் விற்பனையில் உள்ளது. விலை. ரிம: 5.00

**3. பீடச்சிறுவர்களுக்கு மகத்தான நன்றிகள்** இவர்கள் தங்களுடைய முகாமை சிறப்பாக முடித்ததற்காக பாராட்டுகள். இதனை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக்க்குழுவினருக்கும் நம்முடைய நன்றிகள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

➢ **2017 ஆம் ஆண்டின் திருவருகைக் காலத்தில் ஒப்புரவாகுவோம்**

18 **டிசம் (திங்கள்) மாலை** 7.30 திருக்குடும்ப ஆலயம் - காஜாங்
19 **டிசம் (செவ்) மாலை** 7.30 புனித ஜோன் வியான்னி – தம்பின்
**மாலை** 7.30 திரு இருதய ஆண்டவர் ஆலயம், K.L
20 **டிசம் ( புதன்) இரவு** 8.00 மரியாள் கடவுளின் தாய் ஆலயம், பகாவ்
21 **டிசம் ( வியா) மாலை** 7.00 புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயம், P.J
21 **டிசம்** (வெள்ளி) பகல் 12.30 புனித யோவன் பேராலயம், K.L

➢ அமல உற்பவ ஆலயம், போர்டிக்சன்: தங்களுடைய பங்கு பராமரிப்பு செலவுகளுக்காக, நிதி திரட்டும் வகையில் பரிசு குலுக்கல் சீட்டு விற்பனை செய்ய 17-12-2017 இன்று நம்மிடையே வந்துள்ளார்கள். குலுக்கல் சீட்டுகளை வாங்கி நம்முடைய ஆதரவைத் தெரிவிப்போம்.

➢ சிரம்பான் மினவுதல் தேவாலயத்தில் முகநூல் பக்க:ம் (**@churchofthevisitationsban**) நம்முடைய ஆலய முகநூல் பக்கத்தை சென்று காணுங்கள். அண்மைய செய்திகள், நிகழ்வுகள் ஆகியவை அனைத்து வயதினருக்கும் ஏற்ற வகையில் பதிவேற்றம் கண்டுவருகிறது. நம் பங்கு மக்களோடும் உரையாட இது ஒரு நல்ல வாய்ப்பு.

➢ **2017 கிறிஸ்மஸ் மற்றும் 2018 புத்தாண்டு திருப்பலி அட்டவனண**

**a) கிறிஸ்மஸ் நள்ளிரவு 24 டிசம்பர் (ஞாயிறு)**
மாலை 5.00 மணி (ஆ) இரவு 7.00 (த) இரவு 9.00 (சீனம்) இரவு 11.00 (ஆ) மாலை 4.30 (தித்தி)

**b) கிறிஸ்மஸ் நாள் (25 டிசம்பர்) திங்கட்கிழமை**
காலை 7.00 (த) காலை 9.00 (ஆ) காலை 11.00 (சீ) பகல் 1.00 (தேமோ)

**c) புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி (டிசம்பர் 31) ஞாயிறு**
இரவு 8.00 நான்கு மொழி திருப்பலி - நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல்

**d) புத்தாண்டு திருப்பலி (ஜனவரி 1 - திங்கட்கிழமை)**
காலை 7.00 (த) காலை 9.00 (ஆ) காலை 11.00 (சீ) பகல் 1.00 (தேமோ)

**e) டிசம்பர் 26-29 வரை தினமும் மாலை 7.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.**

➢ **கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப் பாடல்கள்**

கிறிஸ்மஸ் பாடல்கள் பாடி கிறிஸ்து பிறந்த மகிழ்ச்சியை எடுத்து சொல்வது நம் திருச்சபையின் பாரம்பரியமான நிகழ்ச்சி. ஒவ்வொரு அதிச./சோன் உறுப்பினர்கள் இதை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். தனிமையில் இருப்போர், வயதானோர், நோயாளிகள் உள்ள இல்லங்களுக்கும், குடியேற்ற வாசிகளின் இல்லங்கள், மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் வார்டுகள், முதியோர் இல்லம், காவல் நிலையத்திற்கு அருகே, அங்காடிகள் இதுபோன்ற இடங்களுக்குச் சென்று பாடல் பாடுங்கள்.

➢ "கிறிஸ்மஸ் கரோலிங் 2017" **காவல்துறை அனுமதிப் பத்திரம் (Police Permit for "Christmas Carolling 2017")** : ஆலய அலுவலகத்தில் உள்ளது. சோன் மற்றும் அதிச பொறுப்பாளர்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம்

➢ ஜோன் போல் II தூதுரை இல்லம்: எண்: 11 & 12 கடை இல்லம் (நம் உணவுவிடுதிக்குப் பின் உள்ளது) இப்போது பராமரிப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவை முழு வெற்றியடைய உங்கள் செபங்களில் ஒப்புக்கொடுங்கள்.

➢ செண்டயான் கல்லறைத் தோட்டம்: சிரம்பான் கிறிஸ்துவ கல்லறைப் பணிக்குழு இந்த இடத்தை வெகுவிரைவில் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்துவருகின்றது. இதைப் பற்றிய ஏதேனும் விவரங்களுக்கு பங்கு அலுவலகத்தை நாடவும். அவ்வப்போது இதைப் பற்றிய அண்மைய செய்திகளை எதிர்பாருங்கள்.

➢ 2018 ஆம் ஆண்டின் திருமணம் செய்வோரின் கவனத்திற்கு: குருவானவரைச் சந்திக்க தயவு செய்து முன்பதிவு செய்துகொள்ளவும். கத்தோலிக்க திருமண பயிற்சிகள் விரைவில் தொடங்கவுள்ளன.

➢ **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
**குறிப்பு:** நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.

➢ **ஆலய வளாகம் மற்றும் அறைகள் முன்பதிவு:** கூட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு முன்கூட்டியே அறைகளை பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவு அனுமதிக்கப்படாது.

➢ தூய்மையாக வைத்திருங்கள். மாதா கெபி மற்றும் மெழுகுத்திரி தட்டுகள் ஆகியவற்றை எப்போதும் தூய்மையாக வைத்திருப்போம்,

➢ **தமிழ் மறைக்கல்வி** வகுப்புகளில் பயிற்றுவிக்க மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் சூசை செல்வநாதன் அவர்களை தொடர்பு கொள்ளவும். 012 903 6581